1973 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

* **526. வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள தேர்வழி கிராமம் முதல் ஜி.என்.டி. தேசிய நெடுஞ்சாலைக்கு கோட்டைக்கரை வழியாக, கிராமச்சாலைத் திட்டத்தின் (Rural Road Scheme) கீழ் தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன இலக்கணப்படி, 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு என்றிருந்தாலும், பேருந்து சாலைகள் செல்கின்ற சாலைகளுக்கு முதலிடம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே. தேர்வழி கிராமம், அதன் உட்பட்ட சிற்றூர்களின் மக்கட் தொகை கணக்கீட்டில், மொத்த மக்கள்தொகை 1,500-க்கு எட்ட வில்லை. ஊர்கள், சிற்றூர்கள் மக்கட்தொகை கணக்கீட்டில் 1,500 மக்கட் தொகை அதற்கு மேற்பட்ட குடியிருப்புகள் நிறைய இருக்கின்றன. நிதி ஒதுக்கீட்டைக் கவனிக்கும்போது, இப்பொழுது இதை சேர்த்துக்கொள்ள இயலாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பஸ் போகின்ற சாலையைப் பார்த்தோமானால், இன்றைய தினம் எல்லா இடங்களுக்கும் பஸ்கள் போவதால், எவை எவை பஸ்கள் செல்லக்கூடிய முக்கிய பாதைகள், எந்த எந்த பஸ் சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும், எவையெவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம் என்பவைகளை எல்லாம் பற்றி பரிசீலனை செய்துகொண்டு வருகிறோம்.

எல்லாபுரம், கும்முடிப்பூண்டி ஒன்றியங்களில் சர்க்கரைக் கார்டுகள் வழங்கல்.

* **527. வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சர்க்கரைக் கார்டுகள் வழங்கப்பட்டுவிட்டனவா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படி கொடுக்கப் பட்டிருக்கிற கார்டுகள் அனைத்திற்கும் சர்க்கரையையும் வழங்கு வதற்கு சிறப்பு ஆணை வழங்கப்படுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு சர்க்கரையும் வழங்கப்படுவதற்கு உரிமம் இருக்கிறது.

காமக்கப்பட்டியருகே சோதனைச்சாவடி.

*528 **வினு—திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக-கேரள எல்லையில் உள்ள காமக்கப்பட்டிக்கு அருகில் உணவு தானியச் சோதனைச்சாவடி ஏற்படுத்தப்பட் டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதை பேரிஜம் என்ற இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, பொதுவாக, கேரள எல்லைபோன்று இம்மாதிரியான இடங்களில் செக் போஸ்டுகள் அமைக்கப்படுவதாகவும், இதனுல், அவற்றிற்கு இடையிலே உள்ள கிராமங்களில் விலை உயர்ந்து, அரிசி அவ்விலையில் விற்கப்படுவதாக வும் கேள்விப்பட்டதால்தான் இந்தக் கேள்வியை எழுப்பியிருக் கிறேன். அதை விசாரித்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விப்பட்டதைச் சொல்கிருர்கள். இப் பொழுது அங்கெல்லாம் செக் போஸ்ட் இல்லை. முன்பு லெவி போட்ட காரணத்தாலே காமக்கப்பட்டிக்குப் போகிற வழியிலே செக் போஸ்டுகள் இருந்தன. இப்பொழுது அவைகளெல்லாம் இல்லை.